## 2

# ஜீவனுள்ள நம்பிக்கையில் சந்தோஷமாயிருத்தல் (1 பேதுரு 1:3-12)

*பகுத்தறிவு வாதம் நம்பிக்கையாயிருக்கும்படி கூறுவதால் ஞானமுள்ள ஒரு மனிதர் நம்பிக்கையாயிருக்கிறார். எதிர்காலம் மிகச்சிறந்ததாக இருக்கும் என்று நம்புவதற்குக் காரணங்களை நாம் கொண்டுள்ளபோது, நம்மால் சிரமங்களைச் சகித்துக்கொள்ள முடியும். ஞானமுள்ள ஒரு மனிதரின் நம்பிக்கையையே பேதுரு தமது வாசகர்களுக்கு முன்பாக நிறுத்திக்காண்பித்தார்.*

## இயேசு ஜீவிக்கிறார் என்பதால் நம்பிக்கை ஜீவிக்கிறது (1:3-5)

சமீபத்தில் கிறிஸ்துவுக்குள் இணைந்து அவரது நாமத்திற்காக ஏற்கனவே ஒரு சுமையைச் சுமக்க அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு, ஆவிக்குரிய ஒரு நடத்துனர் கூற வேண்டியிருந்தது என்ன? அவர்கள் ஒரு புதிய வாழ்வைத் தொடங்கியிருந்தனர், ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையை சந்தோஷத்துடன் கண்ணோக்கிக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் அயலகத்தவர்களால் புறக்கணிக்கப்படுதல், அலுவர்களால் வேட்டையாடப்படுதல், மற்றும் வாழ்வின் தேவைகள் மறுக்கப்படுதல் ஆகியவற்றை எண்ணியிருக்கவில்லை. பேதுரு நம்பிக்கை வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அவர் இந்த வார்த்தையை இவ்வதிகாரத்தில் மூன்று முறை (வசனங்கள் 3, 13, 21) மற்றும் 3ம் அதிகாரத்தில் இன்னும் இரண்டு முறை (வசனங்கள் 5, 15) பயன்படுத்தினார். பேதுரு எழுதிய முதல் நிருபம் "நம்பிக்கையின் நிருபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது மற்றும் பேதுரு "நம்பிக்கையின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்பட்டுள்ளார். புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும், பேதுரு மிகவும் அடிக்கடி நம்பிக்கைக்காக வேண்டுகோள் விடுத்தார் என்று கருத்துக் கொள்வது கடினமாயிருக்கும். உதாரணமாக, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மூன்று அதிகாரங்களில் (5, 8 மற்றும் 12) பவுல் இவ்வார்த்தையைப் பதினைந்து முறை பயன்படுத்தினார். 1 பேதுரு நிருபத்தை "நம்பிக்கையின் நிருபம்" என்று அழைத்தல் ஒரு மிகைக்கூற்றாக இருந்தாலும், 1ம் அதிகாரத்தின் செய்தியின் கீழே நம்பிக்கை உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. கிறிஸ்தவ நம்பிக்கையானது முடிவுக் காலம், கர்த்தரின் தரிசனம் மற்றும் எல்லாப் பொருள்களும் பட்சிக்கப்படுதல் ஆகியவற்றுடன் வலுவாகக் கட்டப்பட்டுள்ளது (1:5, 7, 9, 13).

இயேசு கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்திருந்தார் என்பதைப் பேதுருவின் வாசகர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் ஒரு ஜீவனுள்ள

*நம்பிக்கையினுள் புதிதாகப் பிறந்திருந்தனர் - ஜீவனுள்ள கர்த்தர் என்ற வகையில் கிறிஸ்து ஆளுகை செய்வதால் இந்த நம்பிக்கை ஜீவனுள்ளதாக இருக்கிறது (1:3, 21).*

*இந்த ஜீவனுள்ள நம்பிக்கையில் யாரெல்லாம் பங்கேற்கலாம்? "மறுபடியும் ஜெநிப்பிக்கப்" பட்டவர்கள் இதில் பங்கேற்கலாம் என்று பேதுரு கூறினார் (1:4). தேவன் "நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" என்று (KJV) வேதாகமம் கூறுகையில், NIV வேதாகமம், "அவர் நமக்குப் புதுப்பிறப்பைக் கொடுத்திருக்கிறார்" என்று கூறுகிறது. ஏறக்குறைய முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இயேசு, நிக்கொதேமுவிடம் கூறியிருந்ததைக் காட்டிலும் அதிகமாக எதுவும் பேதுரு கூறவில்லை. ஜீவனுள்ள நம்பிக்கையானது, தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்திருத்தல் மூலமாக வருகிறது (யோவான் 3:5). "தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்திருத்தல்" என்ற சொற்றொடர், ஞானஸ்நானத்தைக் குறிப்பதாக உள்ளது. ஞானஸ்நானத்தில் ஒருவர் கர்த்தருடன் இணைதலில் இருந்து எழுகிறபோது, ஜீவனுள்ள நம்பிக்கையில் பங்கேற்பதற்காகப் புதிதாகப் பிறக்கிறார். ஞானஸ்நானத் தண்ணீரில், கிறிஸ்துவின் இரத்தத்தை அவர் சந்திக்கிறபோது, அவர் "என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசன"த்தினாலே மறுபடியும் பிறக்கிறார் (1:23).*

*கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை நிலையாக வைத்திருக்கும் இந்த ஜீவனுள்ள நம்பிக்கை எதுவாக உள்ளது? இது, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய ஒரு பரலோக சுதந்தரமாக உள்ளது என்று பேதுரு கூறினார் (1:4). "சுதந்தரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ஒருவரின் பங்கு அல்லது பாகத்தை ஏற்றுக்கொள்ளுதல் பற்றியதாக உள்ளது. கிறிஸ்தவருக்கான பங்கு என்பது ஒரு சுதந்தரவாளியாக உள்ளது. கலாத்தியர் 4:1-7ல் பவுல், ஒரு வேலைக்காரரின் பாகத்தை ஒரு மகனின் பாகத்துடன் வேறுபடுத்தி ஒப்பிட்டார். தேவன் மாத்திரமே தமது மகன்கள் மற்றும் மகள்களுக்கு நியமிக்கக்கூடிய சுதந்தரத்தின் முழுப்பங்கை, கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர், மகிழ்வுடன் அனுபவிக்கிறார்.*

*பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள பங்கு பற்றிய சிந்தனையானது, இன்றைய நாட்களில் நம்மில் பலருக்கு அர்த்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாக, பேதுருவின் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்பட்டு இருக்கலாம். உடல்நலப் பராமரிப்புச் செலவு உயர்வு அல்லது அயலகத்தவர்களை ஈர்க்கக்கூடிய ஒலிபரப்பு அமைப்பை நிறுவுதலின் வாய்ப்புக்கான செலவு உயர்வு ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, கர்த்தருடைய மறுவருகையும் பரலோகத்தின் சுதந்தரமும் சிறிதளவே ஆர்வத்தைத் தரவழைக்கின்றன. இன்றைய நாட்களில், ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ, பரலோக வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற் காகத் தன்னை ஏங்கச் செய்யும் கருத்துநோக்கை ஆதாயப்படுத்த முடியுமா? பேதுரு ஒரு பதிலைக் கொடுத்தார்: "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்த மாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவான" கருத்துநோக்குகள் (1:5), "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது ... புகழ்ச்சியும் கனமும் மகிமை"யும் (1:7), மற்றும் "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபை" (1:13) ஆகியவை. இவை வாழ்வின் ஒவ்வொரு வெற்றி, தோல்வி, இலக்கு, சந்தோஷம் மற்றும் துக்கம் ஆகியவற்றிற்கு வண்ணம் தீட்டும். காலத்தின் முடிவு பற்றிய சிந்தனையானது, உலகத்தில் ஊன்றியுள்ள ஒரு இருதயத்தையும்*

குணமாக்க முடியும்.

## துன்பம் இருந்தபோதிலும் சந்தோஷம் ஜீவிக்கிறது (1:6-9)

தங்கள் விசுவாசத்திற்காகப் பாடநுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு என்ன கூற முடிந்தது? நம்பிக்கைக்கான வேண்டுகோள் இயல்பானதாகக் காணப்படுகையில், சந்தோஷம் என்பது மிக அரிதாகவே அவர்களுக்கு உரியதாக இருந்தது. இருந்தபோதிலும் பேதுரு, கிறிஸ்துவுக்குள் அவர்களின் சந்தோஷம் பற்றி, கட்டுப்படுத்த இயலாத ஒரு நினைவூட்டுதலைக் கொடுத்தார். KJV வேதாகமம் மிகை இயல்புடையதாகக் காணப்படுகிறது, இருப்பினும் இது கிரேக்க மொழிநடையை நன்கு வெளிப்படுத்துகிறது: "நீங்கள் சொல்லிமுடியாத சந்தோஷத்தினால் அகம்மகிழ்ந்து மகிமை நிரம்பப் பெற்றிருக்கிறீர்கள்" (1:6). கிரேக்க மொழியில் இந்தச் சொற்றொடரானது மொழிபெயர்ப்பைக் காட்டிலும் அதிகமானதாக, உயர்வுக்கூற்றுக்ள் மிகுதியும் கொண்டதாக உள்ளது. இந்த அகம்மகிழ்வு யாவும் எதைப்பற்றியது? சாராம்சத்தில் பேதுரு, "தேவனுடைய குமாரன் உங்களை நேசிக்கிறார், நீங்களும் அவரை நேசிக்க வந்திருக்கிறீர்கள். அவர் உங்களை உங்கள் பாவத்திலிருந்து மீட்பதற்காகத் தமது உயிரையே கையளித்திருக்கிறார். இப்போதும்கூட, நீங்கள் பாடுகளை அனுபவிக்கையில், உங்கள் விசுவாசத்தின் இலக்கான உங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்பைப் பெறுகிறீர்கள். நீங்கள் சொல்லி முடியாத சந்தோஷத்தினால் அகமகிழலாமே" என்று கூறினார்.

கிறிஸ்து நமக்கு, இந்த உலகத்தில் வாழ்வதற்குச் சாத்தியப்பட்ட அளவில் மிகச்சிறந்த வாழ்வை நமக்குக் கொடுக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் நமது சிந்தைகளை நித்தியத்தை நோக்கி இயக்குதல் மூலமாக அவர் இதைச் செய்கிறார் என்பது ஒரு வழியாக உள்ளது. 1 பேதுரு நிருபத்தை நாம் வாசிக்கையில், அப்போஸ்தலர் நித்தியத்தைத் தமது கண்ணோக்கில் எப்போதுமே கொண்டிருந்தார் என்ற சிந்தனையில் இருந்து நாம் தப்ப முடியாது. பேதுரு, "உங்கள் கண்களால் நீங்கள் அவரைக் காணாதிருக்கலாம், ஆனால் நீங்கள் அவரை விசுவாசித்திருக்கிறீர்கள், மற்றும் விசுவாசத்தினால் நீங்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பைக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறினுர். பல விஷயங்கள் நமக்கு முன்பாக நித்தியத்தைக் காத்துக்கொள்ளக்கூடும்: சந்திப்பின் நாள் (2:12), இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் இருத்தல் (3:22), ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கத் தேவன் ஆயத்தமாயிருத்தல் (4:5), எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருத்தல் (4:7), அவரது மகிமை வெளிப்படுதல் (4:13), பிரதான மேய்ப்பர் தோன்றுதல் (5:4) ஆகியவை. நாம் நித்தியத்தின்மீது நமது கண்களைக் கொண்டிருக்கும்போது, இந்த உலகம் தனது சிறு தோல்விகள் மற்றும் வெற்றிகள் ஆகியவற்றுடன் மங்கலாகிறது. கிறிஸ்துவை அறிதல் என்பது மறுபடியும் நடப்புக்கு வருதலாக உள்ளது. கிறிஸ்து, வாழ்வின் மீது ஒரு புதிய கருத்துநோக்கை அளிக்கிறார், அந்தக் கருத்துநோக்கு இல்லாத நிலையில் வறண்ட நிலமாக இருக்கக்கூடிய இருதயத்தில் அது பெருக்கெடுத்து ஓடுகிறது.

## *தீர்க்கதரிசிகளின் ஊழியத்தின் மூலமாக ஊக்கப்படுத்துதல் ஜீவிக்கிறது (1:10-12)*

*இயேசுவின் பிறப்பு, வாழ்வு மற்றும் போதனை ஆகியவற்றைப் பற்றி எழுதிய தீர்க்கதரிசிகளைப் பற்றிப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார். அவர்களின் ஊழியம் புதிய ஏற்பாட்டிற்கு உலகளாவிய சாட்சியமாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் சாட்சியம் பற்றி லூக்கா 24:27ல் இயேசு பேசிய அதே கருத்தில் பேதுரு அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கலாம், ஆனால் இன்னொரு சாத்தியக்கூறு நிலவுகிறது. புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். பேதுருவின் சிந்தையில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோ அல்லது புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோ, யார் இருந்தாலும், தேவன், சிறப்புக்குழுவாகத் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களை, ஒரு சுதந்திரத்திற்கு ஆயத்தப்படுத்தும்படியாகத் தமது செய்தியாளர்களை அனுப்பியிருந்தார். பேதுருவின் வாசகர்களுக்குத் தீர்க்கதரிசிகள் பணிசெய்து, தேவபக்தியற்றவர்களின் பரிகாசத்தை அவர்கள் சகிக்கும்படியாக்கினர். புதிதாய்ப் பிறந்துள்ள நிலையில் அவர்கள், தேவனுடைய தீர்மானம் நிறைந்த ஆசீர்வாதத்தை - பரலோகத்தில் இருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரினால் பிரசங்கிக்கப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை, மகிமை நிறைவை - பெற்றுக்கொள்பவர்களாக இருந்தனர்.*

## *முடிவுரை*

*பேதுருவின் வார்த்தைகள் ஒரு அஸ்திபாரத்தை இட்டு, கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தின் மாபெரும் அடிப்படைகளை நினைவுகூரும்படி அவர்களைத் தூண்டின. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக அவர்கள் அழைக்கப்பட்டிருந்ததான ஜீவனுள்ள நம்பிக்கையானது உபத்திரவங்கள் யாவற்றையும் அமர்த்தப் போதுமானதாக இருந்தது. நம்பிக்கையும் வாக்குத்தத்தமும், உலகத்தின் தடைகளால் அழித்துப்போட இயலாததாக இருந்த சந்தோஷத்திற்குக் காரணத்தைக் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தீர்க்கதரிசிகளால் ஊழியம்கொண்டவர்களாக இருந்தனர் என்பதைப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டினார். அவர்கள், தேவனுடைய நித்திய தீர்மானத்திற்குச் சுதந்தரவாளிகளாக இருந்தனர். பேதுருவின் நிருபம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது, ஆனால் அதன் செய்தியானது தேவனுடைய மக்களை இன்னமும் தூண்டுகிறது. கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளுகிற எதிர்ப்பானது, நம்பிக்கை மற்றும் மகிமையின் வாக்குத்தத்தம் ஆகியவற்றின் வெளிச்சத்தில் காண்கையில், சிறிதளவே விளைவுள்ளதாக இருக்கிறது. பேதுரு தமது நிருபத்தில் கூற அதிகமானவற்றைக் கொண்டிருந்தார், ஆனால் கிறிஸ்துவுக்குள் இருத்தலின் சந்தோஷத்தினுடைய வெளிச்சத்திலேயே எல்லாம் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.*